RECEIVED
Periodicals
Library

# மாகாணசபைக்கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 15 | துல்ஹஜ்ஜா 24 | இதழ் 41
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 29-06-1989

# குண்டு வெடிப்பு! நால்வர் பலி! 26 பேர் காயம்!!

(காலி)

காலி நகரசபைக் கட்டிடத்துக்கு வெளியே வாகனமொன்றில் இருந்து பாரிய குண்டு ஒன்று வெடித்ததில் நான்கு பேர் பலியானார்கள்; 26 பேர் படுகாயமடைந்தனர்.

நகரசபைக் கட்டிடத்தில் நேற்று தென்மாகாண சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்தக் குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தில் நகரசபைக் கட்டிடத்தின் ஒருபகுதி முற்றாக தரைமட்டமானதாகவும், மாகாணசபை உறுப்பினர்களுக்குச் சொந்தமான ஐந்து வாகனங்கள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலியான நால்வரில் ஒருவர் பொலிசார். படுகாயமடைந்த 26 பேரும் காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறுபேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து

(8-ம் பக்கம் பார்க்க)

# 'சார்க்' வெளியுறவு அமைச்சர்கள் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது!

## இலங்கை பகிஷ்கரிப்பின் எதிரொலி!

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தில் அடுத்தவாரம் நடைபெறவிருந்த 'சார்க்' அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

நேற்றுமாலை இது தொடர்பாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படை வெளியேற்றம் தொடர்பான பிரச்னையைக் காரணம் காட்டி இந்த

(8ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் ஊரடங்கு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுக்காலை சில மணிநேரம் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதன் காரணமாக, தூர இடங்களுக்குச் செல்லவேண்டிய பல தனியார் வாகனங்களும் இ. போ. ச. பஸ்களும் திரும்பிவந்தன.

முகமாலைக்கும் கொடிகாமத்திற்குமிடையே மோதல் சம்பவமொன்று இடம்பெற்றதாகவும், அதன் காரணமா

(8-ம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் பகுதியில் மோதல் போக்குவரத்து பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை புறப்பட்டுச் சென்ற பஸ்கள் எதுவும் மிருசுவிலுக்கப்பால் செல்லவில்லை.

மிருசுவிலுக்கும், எழுதுமட்டுவாளுக்குமிடையே நடைபெற்றமோதல் சம்பவத்தைத் தொடர்ந்தே இப்பகுதியில் போக்குவரத்துத் தடை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த மோதலில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக ஊர்ஜி

(8ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை நிறுத்தம் இலங்கை அரசு தீர்மானம்

(கொழும்பு)

**வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை எதிலும் ஈடுபடுவதில்லை என்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அரசாங்கத்தின் இந்த முடிவை அமைச்சரவைப் பேச்சாளரான கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு: ரணில் விக்கிரமசிங்கா நேற்று அறிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பாக கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தொடரும் வன்முறைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவே இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இளைஞர் சடலம்

(யாழ்ப்பாணம்)

கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு இளைஞனின் சடலம் நேற்றுமாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (கு)

## ராஜீவின் கடிதம் நேற்று பிரேமா'விடம் கையளிப்பு!

(கொழும்பு)

இந்திய அமைதிப்படை விலகல் தொடர்பான இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் உத்தியோகபூர்வ பதில், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

இந்தியத் தூதுவர் திரு. மல்ஹோத்ரா ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து

(8-ம் பக்கம் பார்க்க)

## அந்த எலும்புக்கூடு

(நமது நிருபர் திலீபன்)

பல வருடங்களுக்கு முன்னர் வைத்தியர் ஒருவரினல் பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்த மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டு, சில தினங்களுக்கு முன்பாக யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(8-ம் பக்கம் பார்க்க)

## மாலிசந்தியில் நேற்றுக்காலை ஷெல், துப்பாக்கிபிரயோகம்: மூவர் பலி! பலர் படுகாயம்!

(வடமராட்சி)

அல்வாய் மாலிசந்திப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து துப்பாக்கிச் சூடு, ஷெல் சத்தங்கள் எதிரொலித்தன.

ஷெல் தாக்குதல்களால் பலவீடுகள் சேதமடைந்தன. பலர் படுகாயங்களுக்குள்ளாகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளானவர்களில் மூவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

திருமதி பொன்னம்மா கந்தையா (65 வயது), சோமசுந்தரம் சுகதாஸன் (27 வயது), எஸ். நடராசா (55 வயது) ஆகிய மூவருமே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களாவர்.

இச்சம்பவங்களால் இப்பகுதி மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக்காணப்பட்டது. வாகனப் போக்குவரத்தும் இடம்பெறவில்லை.

## வல்லையில் ஹர்த்தால் போக்குவரத்தும் ஸ்தம்பிதம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

துக்கம் அனுஷ்டிக்கும் முகமாக வீதிகள்தோறும் கறுப்புக்கொடிகளும் மகரதோர

(8-ம் பக்கம் பார்க்க)

## பூம்புகார், கோயிலாக்கண்டி மக்கள் இடம்பெயர்வு!

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியிலுள்ள பூம்புகார், கோயிலாக்கண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்தப்பகுதிகளிலுள்ள மக்களை இடம்பெயருமாறு ஒலிபெருக்கி மூலம் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

இப்பகுதி மக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் கருதியே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டதாகத் தெரியவரு

(8-ம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் நந்தாவில் சம்பவம்: உதவிஅரசஅதிபர், பூசகர்பலி!

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், கோவில் பூசகரும், மற்றொருவருமாக மூவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். பலர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை நந்தா[illegible] அதன் தொடர்ச்சியாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது.

மோதல் சம்பவத்தை அடுத்து அவ்விடத்தில் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டதாகவும்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்திய உறவு நிலை: லண்டன் தினசரிகள் கருத்து

(லண்டன்)

இந்திய அமைதிப்படை விவகாரம் மூலம் இலங்கை – இந்திய அரசுகளுக்கிடையில் ராஜதந்திர மட்ட உறவில் விரிசல் நிலை தோன்றி வருவதாக லண்டன் தினசரிகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

இலங்கை நிலைமைகள் குறித்து நேற்றை 'கார்டியன்' 'பினன்ஸியல் ரைம்ஸ்', 'ரைம்ஸ்' பத்திரிகைகள் முதல் பக்கத்தில் பல்வேறு செய்திகளை வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவு நிலை விரிசல் இவ்வாண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஓர் பிரச்னையாக அமையும் என்று இப்பத்திரிகைள் கருத்து வெளியிட்டுள்ளன.

'இலங்கை ஜனாதிபதி திரு. பிரேமதாசா இந்திய அமைதிப் படை வாபஸ் தொடர்பாக வடக்கு – கிழக்கிலும் தொழிலாளர் வேலை நிறுத்தம் மூலம் தெற்கு மத்திய பகுதியிலும் இருவேறு பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளார். எனினும் அமைதிப்படை வாபஸ் விவகாரத்தில் இருதலைவர்களும் தமது பிடிவாதத்தை விடுவதில் சாத்தியம் பெருமளவு குறைவு' என்றும் இப் பத்திரிகைகளில் குறிப்பிட்டுள்ளன.

# சர்வஜன வாக்கெடுப்பு 90 ஜனவரியில் நடைபெறும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கை இணைப்பதற்காகன சர்வஜன வாக்கெடுப்பு 1990-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 5-ம் திகதி வடக்கு கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதென்று முன்னர் முடிவு எடுக்கப்பட்டிருந்தது. தெரிந்ததே,

அந்த முடிவு தற்போது 1990–ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது;

மாகாண சபைகள் சட்டத்தின்கீழ் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## புகையிரதப்பாதை திருத்த வேலைகள்

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியிலும் புகையிரதப் பாதைகள் புனரமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. இந்தப் புனரமைக்கும் பணியில் புகையிரதப்பகுதி ஊழியர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர். சுன்னாகம் புகையிரத நிலையத்திலிருந்து மல்லாகம் ஊடாக இந்தவேலைகள் நடைபெறுகின்றன.

## பரீட்சை சபை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி நிலைய பரீட்சை சபையொன்று அண்மையில் அமைக்கப் பட்டுள்ளது. பண்டத்தரிப்புக் கோட்டக்கல்வி அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இப் பரீட்சை சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: இ. சிவானந்தன், உப தலைவர்: எம். சிவராசரத்தினம், செயலாளர்: எஸ். அருளையா, பொருளாளர்: வி. நாகராசா.

ஒவ்வொரு கொத்தணி மட்டத்திலும் பரீட்சை சபை அமைக்கப்படவேண்டுமென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## சட்டவிரோத மின் பாவனை: மாநகரசபை ஊழியர்மீது தாக்குதல் முயற்சி!

[யாழ்ப்பாணம்]

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியைத் தடுக்கச்சென்ற யாழ்.மாநகர சபை மின்சாரப் பகுதி ஊழியர்கள்மீது கோஷ்டி ஒன்று தாக்குதல் நடத்த முயன்ற சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சட்டத்துக்குப் புறம்பான முறையில் மின்சாரப் பாவனை மேற்கொள்ளப்பட்ட வீதி ஒன்றின் மின்கம்பிகள் அறுந்து வீழ்ந்து கிடந்ததைத்திருத்தம் செய்யச் சென்ற யாழ்.மாநகர சபையின் மின்சாரப் பகுதி ஊழியர்கள் அங்கு மேலும்பல இடங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் எடுப்பதற்காக இணைக்கப்பட்டுள்ள வயர்களைக் கண்டு அவற்றை அகற்றமுயன்றபோது கோஷ்டி ஒன்று அவர்களைத் தாக்க முயன்றதாம். மின்சார சபை ஊழியர்கள் பின்வாங்கிச் சென்று மேலிடத்தில் இது குறித்துப் புகார் செய்துள்ளனர்.

அடுத்து யாழ். மாநகரசபை உயரதிகாரிகள் மேலும் பல ஊழியர்களைத்திரட்டி.குறித்த இடத்திற்கு அனுப்பியதைத் தொடர்ந்து அங்கு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சட்டத்திற்குப் புறம்பாக மின்சாரம் எடுப்பதற்குப் பயன்படுத்திய வயர்களும் அகற்றப்பட்டன.

இச்சம்பவம் யாழ். பழைய பூங்கா வீதியில் இடம்பெற்றது. சட்டத்துக்குப் புறம்பாக மின்சாரம் எடுத்ததினால் மின்கம்பிகள் அறுந்த வேளையில் அப்பகுதியில் பாவனையில் இருந்த தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி போன்றவை பழுதடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மாமரங்களைப் பராமரிக்க நன்கொடை

(யாழ்ப்பாணம்)

அமரர் சீ. துரைசிங்கம் கிளிநொச்சியில் பணியாற்றிய காலத்தில் நாட்டிய மாமரங்களைப் பராமரிப்பதற்காக அவரது மகன் கனடாவிலிருந்து கிளிநொச்சி செயலக பிரதிக்காணி ஆணையாளருக்கு ஒரு தொகைப்பணத்தை அனுப்பியுள்ளார்.

கனடாவில் வாழும் திரு. ரீ. வி. வை. கைலாசகுமாரன் அனுப்பி வைத்துள்ள பணத்தொகை கிளிநொச்சி கச்சேரி நலன்புரிச்சங்கத்திற்கு வழங்கப்பட்டு, அதன் மூலம் குறித்த மாமரங்களைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பணிப்புரை வழங்கியுள்ளார். இத்தகவலை கிளிநொச்சி பிரதிக்காணி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## 'சிகரட்' தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 'சிகரட்', கொழும்புச்சோடா போன்ற பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

## புதிய தலைவர் பதவியேற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறிக் கழகத்தின் 49வது தலைவராக ரோட்டறியன் பி. செல்வநாதன் வைபவ ரீதியாக பதவியேற்கிறார். இப்பதவியேற்பு வைபவம் ஜூலை மாதம் 2ம் திகதி காலை 'ஞானம்ஸ்' ஹோட்டலில் நடைபெறும்.

## போதைவஸ்து பாவனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் சில பகுதிகளில் போதை வஸ்து பாவனை அதிகரித்திருப்பதாக அறியப்படுகிறது. 'ஹிரோயின்' போதைவஸ்துவே அதிகமாக உபயோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


### விற்பனைக்கு

வட இந்தியா முறைப்படி சுத்தமாக தயாரிக்கப்பட்ட வெள்ளைப் பூடு அச்சார், தேசிக்காய் ஊறுகாய் எங்களிடம் கிடைக்கும். M. G. M. 777, K. K. S. Road, 208, 1st Cross st, Jaffna.

(சி 2930)

கைதடி நுணாவில் கண்டி வீதியில் வயிரவர் கோவிலடிக்கு அருகாமையில் வீடு கட்டி குடியிருக்க வசதியான 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்:- சின்னத்தம்பி ஸ்ரோர்ஸ், தி. இரத்தினம், பெரியகுளம் வீதி, கைதடி, நுணாவில், சாவகச்சேரி.

(சி-3016)

### தேவை

கொழும்பு தலைமை அலுவலக தொடர்புடைய யாழ் நகரில் உள்ள பிரபல பொருள்கள் விற்பனை செய்யும் ஏஜென்சி நிறுவனம் ஒன்றிற்கு Stock Clerk தேவை விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் வேலை செய்யக்கூடியவராயும், தட்டச்சு (Typing) அனுபவமுடையவராயும் 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட வராயும் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி- விளம்பர இல:- A-311 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(A- 311)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 31-ம் நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி சாந்தகுணநாயகி பஞ்சலிங்கம்

வல்வெட்டித்துறை



0

பூமியில் மலர்வு: 14-3-1923

0

சுவர்க்கம் புகுர்வு: 31-5-1989

0

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்துக் காத்த தெய்வமே! எம்மை ஆறுத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து 31 நாட்களாயினும், உங்கள் இனிய நினைவுகள் எம் இதயங்களில் என்றென்றும் அழியாமல் நிலைத்துநிற்கும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 30-06-1989-இல் கொழும்பு முகத்துவாரத்தில் நடைபெறும் அந்தி சாஸ்திரத்திலும், வீட்டில் நடைபெறும் நினைவுக் கிரியைகளிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

01-06-89-இல் சென்னையில் நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்கட்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:

அன்புக் கணவா:- க. பஞ்சலிங்கம்.

அருமை மகன்மார்:- விஜயகுமார், சுந்தரகுமார்.

மருமகள்மார்:- புஷ்பராணி, சாருமதி.

பேரப்பிள்ளைகள்;- சதீஷ். பிரகாஷ். சந்தோஷ்.

இல: 77, அல்விஸ் பிளேஸ்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

[சி-3014]

## உடன் தேவை

கொழும்பிலுள்ள வீடு ஒன்றை பராமரிப்பதற்கும், சாரதியாக செயல்படவும், 45 வயதிற்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்புகளற்ற, திருமணமான தம்பதி தேவை. உணவும் தங்குமிட வசதியும் அளிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தகுந்த சிபாரிசுடன் வருவது விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ளவும்:

Manager,
A. M. L.
35, Bankshall Street,
JAFFNA.

(C 3018)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுக்கில வருஷம் ஆனி மாதம் 17-ம் திகதி (01-07-1989) சனிக்கிழமை பகல் 11-00க்கும் 1-00 மணிக்குமிடையில் வரும் கடக லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**பாலச்சந்திரன்**
அவர்களுக்கும்
(ரொறொன்ரோ டொமினியன் வங்கி, கனடா)

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**பத்மலோசனி**
அவர்களுக்கும்

யாழ்.கச்சேரி நல்லூர் வீதி, மூத்தவிநாயகர் ஆலயத்தில் திருமணம் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்:

இங்ஙனம்:

சி. குணரத்தினம் தம்பதிகள்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

நா. காசிவிசுவநாதன் தம்பதிகள்
எவர்-றெஸ்ற்
இன்டஸ்றீஸ் அன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
96, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3019)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள்

# பிலிப்பைன்ஸ் தேவாலயத்தில் தாக்குதல்:

# மதகுரு சிரச்சேதம்; 40 பேர் பலி; பைபிள் தீக்கிரை!

## இராணுவம் விரைவு; அரசு அதிர்ச்சி

(மணிலா)

**பிலிப்பைன்ஸில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றினுள் நுழைந்த கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரைச் சிரச்சேதம் செய்ததுடன் தொழுகையில் ஈடுபட்டிருந்த 40 பேரையும் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மணிலாவின் தென்மேற்கு பகுதியிலுள்ள மலைப்பிரதேச கிராமமொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:

புரட்டஸ்தாந்து மத தேவாலயமொன்றில் வழிபாடுநடைபெற்றுக் கொண்டிருந்த போது அங்கு வந்த சுமார் 100 கெரில்லாக்கள் தொழுகையை நடாத்திக் கொண்டிருந்த பாதிரியாரை சிரச்சேதம் செய்தபின் தொழுகையிலீடுபட்டவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் அங்கிருந்த 40 பேரும் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து தேவாலயம் முற்றுகச் சேதமாக்கப்பட்டதுடன் அங்கிருந்து பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும், 'பைபிள்' நூலும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதன்பின் கெரில்லாக்கள் அந்தக் கிராமத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமம் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுக்கு எதிரானதென்றும், கொல்லப்பட்ட தேவாலயபாதிரியாரின் சகோதரர் தமக்கு எதிராகச் செயற்பட்டு வந்ததாகவும் கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு வருடங்களில் கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் 300க்கும் மேற்பட்ட பொலிசாரும், இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மதகுருவும், பொதுமக்களும் கொல்லப்பட்டதையடுத்து இப்பகுதிக்கு இராணுவம் விரைந்துள்ளது. இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அதிபர் திருமதி அக்கியூனோ இறந்தவர்களின் குடும்பத்திற்கு தமதுவருத்தத்தைத் தெரிவித்துள்ளார்.

## மாணவர் கொலைகள்: ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யக்கோரி, போராட்டம் நடந்துகொண்டிருக்கும் வேளையிலும் மாணவர்கள் தொடர்ந்தும் கொலை செய்யப்படுவதைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததை மாணவர் ஒன்றியம் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

''சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஆர். கணேஷ்குமார் இம்மாதம் 22-ம் திகதி கைது செய்யப்பட்டார். 24-ம் திகதி அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

''இதனைத் தடுக்க அதிபர்களும். ஆசிரியர்களும்தொடர்ந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது மாணவர்களுக்கும், அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் இடைவெளியையே ஏற்படுத்தும். இது எமது சமுதாயத்தில் பெரும் எதிர்விளைவை உண்டாக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பூஸா இளைஞர்களுக்கு உடன் நிவாரணம்

[யாழ்ப்பாணம்]

பூஸாவிலிருந்து விடுதலையாகி இதுவரை நிவாரணம் கிடைக்காதவர்கள் தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபரோடு தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

காலி பூஸா தடுப்பு முகாமிலிருந்து விடுதலையானவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முப்பத்தியாறு பேர்களுக்கு மட்டுமே இதுவரை நிவாரண உதவிகள்வழங்கப்பட்டுள்ளது என்றும் யாழ். செயலகத்தில் நூற்றியிருபது விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காட்டுப் பகுதியில்

## பர்மிய அரசுக்கு எதிரான மாணவர் பல்கலைக்கழகம்

(ரங்கூன்)

பர்மிய அரசுக்கு எதிரான ஜனநாயப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள், போராளிகள் பெருமளவில் தங்கியிருக்கும் காட்டுப்பகுதியில் பல்கலைக் கழகம் ஒன்றை விரைவில் நிறுவவுள்ளனர்.

பர்மாவில் ஜனநாயக ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க அரசு மேற்கொண்டுவரும்பல முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அரசுக்கு எதிராகச் சாத்வீக முறையிலும், இராணுவ ரீதியிலும் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இதன் ஒருபகுதியாகவே காட்டுப்பகுதியில் பல்கலைக் கழகம் நிறுவ துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு ஜனநாயகத்தை விரும்பும் மாணவர்களுக்கு உலக அரசியலும், பர்மிய அரசியலும் பலவித பயிற்சிகளும் கற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாணவ தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### இந்துக்கள் படுகொலை:

# அமைச்சர் பூட்டாசிங்கை பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டம்!

(புதுடில்லி)

இந்திய உள்துறை அமைச்சர் திரு. பூட்டா சிங்கை பதவி விலகக்கோரியும் பஞ்சாப்பில் இந்துக்கள் கொல்லப்பட்டதையும் கண்டித்து புதுடில்லியில் நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பாரதிய ஜனதா கட்சி ஏற்பாடுசெய்த இந்தஆர்ப்பாட்ட நடவடிக்கையால் புதுடில்லியின் பல பகுதிகளும் நேற்று முன்தினம் ஸ்தம்பிதமடைந்தது. திரு. பூட்டா சிங்கின் வீட்டின் முன்னால் ஆர்ப்பாட்டக்காரர்கள் பெரும் கோஷங்களை எழுப்பியதுடன் அவரை பதவி விலகுமாறும் கூச்சலிட்டனர்.

கடந்த திங்கட்கிழமை பஞ்சாப்பில் மோகா என்னுமிடத்தில் 24 இந்துக்கள் கொல்லப்பட்டதையடுத்தே இந்த நிலை எழுந்துள்ளது. இதையடுத்து பஞ்சாப்பிலும், புதுடில்லியிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக துருப்புகளும் இப்பகுதிகளுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

'காலிஸ்தான்' தனிநாடு கோரிப் போராடி வரும் சீக்கிய தீவிரவாதிகளின் தாக்குதலில் கடந்த ஆறுமாதத்தில் 950 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த வருடம் 2,500 பேர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக மந்த நிலையிலிருந்த சீக்கிய தீவிரவாதிகளின் தாக்குதல் சில வாரங்களில் அதிகரித்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 2-வது கிரிக்கெட் டெஸ்ட் ஆஸ்திரேலியா வெற்றி

(லோட்ஸ்)

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் லோட்ஸில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

'ஆஸஸ்' வெற்றிக் கிண்ணத்திற்கான ஆறு டெஸ்ட் தொடர்களை கொண்ட இப்போட்டியில் முதல் இரு டெஸ்ட்டிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில 286 ஓட்டங்களையும் இரண்டாம் இனிங்ஸில் 359 ஓட்டங்களையும் பெற்றது. ஆஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 528 ஓட்டங்களையும் இரண்டாம் இனிங்ஸில் 4 விக்கெட் இழப்பிற்கு 119 ஓட்டங்களையும் பெற்று ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

இப் போட்டியில் இரு இனிங்சிலுமாக ஆஸ்திரேலிய பந்து விச்சாளர் ரெறி அலெட்டமன் 12 விக்கெட்டுகளை கைப்பற்றியதும் குறிப்பிடத்தக்கது.

1948ற்கு பின், இங்கிலாந்தில் நடைபெறும் டெஸ்ட் தொடரில் அடுத்தடுத்து இரு போட்டிகளில் இங்கிலாந்து அணி தோல்வியுற்றது இதுவே முதல் தடவையாகும்.

## ஜே.வி.பி.யுடன் பேச்சுநடத்த ஈ.பி.ஆர்.எல்.எவ். விருப்பம்

(திருமலை)

ஜே. வி. பி.யினருடன் பேச்சுக்கள் நடத்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விருப்பம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாகக் கட்சியின் செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபா அறிக்கை ஒன்றும் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் அமைதியும், சமாதானமும் நிலவ, சிநேகபூர்வமான பேச்சுக்கள் உதவுமென்றும், திரு. பத்மநாபா ஜே.வி.பி.க்கு விடுத்த அழைப்பில் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் உண்மையான அமைதி நிலவ ஜே. வி. பி.யினர் நிபந்தனையற்ற பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'கிளாசிக்கல்' இசையின் உதவியுடன் வெற்றிகரமாக நடந்த இருதய அறுவை சிகிச்சை

(லண்டன்)

லண்டனிலுள்ள புறாக்மருத்துவமனையில் அறுபத்தாறு வயதுடைய பெண்ணுக்கு மயக்க மருந்து எதுவும் கொடுக்காது, இதய அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக நடாத்தியிருக்கின்றனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

நான்கு மணித்தியாலமாக டாக்டர்கள் நடாத்திய சத்திர சிகிச்சையின் போது அறுபத்தாறு வயதான எய்லீன் மோலினூரவுக்கு மயக்கமருந்து எதுவும் கொடுக்கப்படாமல், எய்லீனுடைய கட்டிலின் அருகே 'கிளாசிக்கல்' இசை டேப்பில் ஒலிக்கொண்டிருந்தது. எய்லீனும் மிக இரசனையாக இசையைக் கேட்டுக் கொண்டு டாக்டர்களுக்கு எந்தவித தொந்தரவும் கொடுக்காமல் சத்திரசிகிச்சைக்கு பூரண ஆதரவு வழங்கினர். இம்மாதிரியான அரிய சிகிச்சைமுறை உலகிலேயே எய்லீனுக்கு மாத்திரம் நடைபெற்றுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'அடிக்கடி மாரடைப்பு ஏற்படுகிறவர்களுக்கு இதயம் பலவீனமாக இருக்கும். அவர்களுக்கு மயக்கமருந்து கொடுத்து [illegible] சத்திர சிகிச்சையை செய்யமுடியா [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## 'ஜனசக்தி' திட்ட வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வறுமைப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட 'ஜனசக்திதிட்ட'வேலைகள் மீண்டும் யாழ். பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சில காலமாக இத்திட்ட வேலைகள் நடைபெறாமலிருந்தமை தெரிந்ததே.

யாழ்ப்பாணத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள் தமது பகுதி கிராமசேவையாளர்களுக்கு 'ஜனசக்தி திட்டம்' சம்பந்தப்பட்ட வேலைகளை துரிதப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒவ்வொரு சிராமசேவையாளர் பிரிவிலும் அடங்கும் ஜனசக்தி திட்ட உபகுழுக்கள் தமது பகுதியில் வாழும்பத்து

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சாத்திரத்தில் சொல்லியுற்ற சூத்திரத்தை மறக்கிறீர்
தர்மர் என்னும் பாத்திரத்தை உட்புறம் துலக்குவீர்.

— இயேசு காவியம்.

## நமது நோக்கு

# கடன்பட்டார் நெஞ்சம் போல்

கம்பன் ஒரு தீர்க்கதரிசியோ? எமது இன்றைய நிலையை—பொருளாதார நிலையை - எண்ணித்தான் ''கடன்பட்டார் நெஞ்சம் போற்கலங்கினன்இலங்கை வேந்தன்!'' என்று பாடினனே?

இன்றைய உலகிலே ஒரு நாட்டின் பொருளாதாரம் தனித்து இயங்கமுடியாது. சர்வதேச வர்த்தகம், நிதியுதவி, நாணயப்பெறுமதி, ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தக நிலுவை போன்ற காரணிகள் நாட்டுப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை அல்லது வீழ்ச்சியை எடுத்துக்காட்டும்.

எமது நாடு பொருளாதாரத்தில் எங்கே செல்கிறது? நாணயம் எங்கே செல்கின்றது? இது பற்றிய சிறப்புக்கட்டுரை ஒன்று எமது பத்திரிகையில்நேற்று வெளியாகியிருந்தது.

1985ஆம் ஆண்டு முதல் எமது நாணயத்தின் செல்வாக்கு குறைந்து வருகின்றது. அதாவது, பிறநாட்டு நாணயப் பெறுமதியின் அளவு கோலால் அளக்கும் போது எமதுநாணயத்தின் பெறுமதி குறைந்துவருகின்றது; நாணயம் 'தேய்ந்து' வழிகின்றது! பிறநாடுகளின் வர்த்தகத்தொடர்புகளுக்கேற்ப வெவ்வேறு விதங்களில் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக, ஜப்பானிய யென். அமெரிக்கடொலர், பிரித்தானிய ஸ்ரேலிங் பவுண் ஆகிய மிக முக்கிய நாணயங்களோடு ஒப்பிடும் போது வீழ்ச்சி தெளிவாகத் தெரிகின்றது. வெளிநாடுகளிலிருந்து காசோலை பெறும் தனப்பட்டவர்கள் சிலர், கூடியளவு ரூபாய் கிடைக்கின்றது என்று சிறுமகிழ்ச்சி தெரிவிப்பதும் எமக்குத் தெரியாமலில்லை. அது போலி மகிழ்ச்சி. முழு நாட்டினதும் பணவீக்கத்தை அறியாமற் கூறும் அற்பமகிழ்ச்சி.

விளைவு என்ன? எமது இறக்குமதிக்குரிய கொடுப்பனவுகள் இலங்கை நாணயத்தில் அதிகரிக்கும்; விலைஏறும்; மக்களுக்குச் சுமை கூடும்! இதைவிட, எமது வெளிநாட்டுக் கடன் சுமை அதிகரித்துவருகின்றது. 1987-ம் ஆண்டைவிட 1988ல் இத்தொகை இரண்டாயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. இன்னோர் விதத்தில் கூறுவதானல் இந்த அதிகரிப்பு 12 சத வீதமாகும். கடன்தொகை அதிகரித்தால் அதற்குக் கட்ட வேண்டிய வட்டியின் தொகையும் அதிகரிக்கும் என்பது சாதாரண மாணக்கனுக்கே தெரியுமே!

இந்தச் சுமை எல்லாம் யார் தலையில்? பொதுமக்கள் இதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அரசு செலவிடும் ஒவ்வொரு சதமும், உற்பத்தியை அதிகரிக்கின்றதா அல்லது ஊதாரித்தனத்திற்குப் போகின்றதா என்று கேள்வி எழுப்ப வேண்டும்.

ஆர்ஜென்டீனுவில் இதை விடச் சற்று மோசமான நிலை வந்தபோது வாங்கிய கடனைக் கட்ட, வட்டியைக் கட்டப் பின்வாங்கினர். உலக வங்கி கடன் வழங்க மறுத்தது. விலைவாசி உயர்வால் மக்கள் கலகமே நடைபெற்றிருக்கின்றது. நாமும் இவ்வாறு செய்யலாமா? விளைவு என்னகும். எமது நாட்டின் நாணயமே கெட்டுவிடும்; வராது நிற்கும் உதவிகளும் பூரணமாக ஒதுங்கிவிடும்.

இந்த நேரத்தில், ஏற்றுமதிகளால் ஓரளவு கடன் பளுவைக் குறைக்க முடிகின்றதா? ஏற்றுமதியா? போக்குவரத்து இல்லை; வேலைநிறுத்தம்; தொழிற்சாலைகள் இயங்கவில்லை; இயங்குவதிலும் அரை குறையான உற்பத்தி; தேயிலை உற்பத்தி பாதிப்பு! சென்மதி நிலுவைப் பாதிப்பை எப்படிச் 'சரிக்கட்டுகிறார்கள்?' எமது வெளிநாட்டுச் சொத்துக்களிலேயே கடந்த நாலாண்டுகளாகக் 'கை' வைத்திருக்கிறார்கள்.

இலங்கை வேந்தன் பல வழிகளாற்கலங்குகின்றான்; கடன் பளுவால் அதிகம் கலங்குகின்றனே?

## ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குக்கீழ் உள்ள பாடசாலைகளில் நூற்று நான்கு ஆங்கில ஆசிரியர்களுக்குவெற்றிடங்கள்இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் தொகுதியில் பத்து வெற்றிடங்களும், யாழ்ப்பாணத்தொகுதியில் இருபத்தியாறு வெற்றிடங்களும், சாவகச்சேரித்தொகுதியில் அறுபத்தெட்டு வெற்றிடங்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட்டூரில் அருள் சுரக்கும் ஆனந்தன்

வட்டு மாநகர் மக்கள் வாழ்ந்திட
வந்துதித்த நாயகன்
பிட்டு விற்ற செல்விக்கு அணை
கட்ட வந்த சேவகன்
அட்ட மூர்த்தியாய் அன்பு கொண்டவர்க்கு
அருள் சுரந்திடும் ஆனந்தன்
வட்ட மாமலர்ப் பாதம் இரண்டையும்
வணங்கி நாளும் வாழுவோம்.

— வ. யோகானந்தசிவம்.

[இன்று வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி வீரபத்திர சிவன் கொடியேற்றம்.]

# உடல் நலம் காக்கும் பாரம்பரிய மருத்துவம்

உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களாலானது என இந்திய ஞானிகள் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே ஆய்ந்து கூறியுள்ளனர். பஞ்சபூதங்களின் செயற்பாடுகளே மனித உடலிலும் நடக்கின்றன.

### ஆயுர்வேதத்தின் அடிப்படை

மனித உடலானது வாத, பித்த, கபம் என்னும் திரிதோஷங்களாலும், வெண்குருதி (இரசம்), இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, எலும்புட்கரு (மச்சை), உயிரணுக்கள் (சுக்கிலம்) என்னும் சப்ததாதுக்களாலும், மலம், சிறுநீர், வியர்வை என்னும் மும்மலங்களாலும் ஆனதுஎன ஆயுர்வேதம் கூறுகிறது. 'தோஷதாது மலா முலாமி சரீரம்'.

தோஷங்கள் ஊட்டப் பொருள்களாகவும், தாதுக்கள் அணுக்கூட்டங்களாகவும். மலங்கள் கழிவுப்பொருள்களாகவும் விளங்குகின்றன, உடல்நலத்தின் பாதுகாப்புக்கு இவையனைத்தினுடைய இயல்பான நிலைகள் காப்பாற்றப்படவேண்டும். எப்போது இவற்றின் ஒழுங்கு நிலைகள் குறைகிறதோ, அப்போது நோய் உண்டாகும். இதுவேஆயுர்வேதத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.

நோயைக் குணப்படுத்த மேற்கொள்வது சிகிச்சை. சிகிச்சையின் நோக்கம் மேற்கண்டவற்றின் ஒழுங்கு நிலைகளைச் சரிப்படுத்துவதாகும். நோய்க்கான காரணங்களை ஒழிப்பதாலும் வேலை, ஓய்வு, உறக்கம் முதலிய பழக்கவழக்கங்களை ஒழுங்குபடுத்துவதாலும், உணவு அல்லது மருந்தின் சிகிச்சையாலும் நோய் குணப்படுத்தப்டுகிறது.

### பரிசோதனையும் சிகிச்சையும்

மருத்துவர் நோயாளியை வெகு கவனத்தோடு பரிசோதனை செய்து நிலைமையினை அறிதல்வேண்டும். இந்தப் பரிசோதனைமுறையில், கண், காது, மூக்கு, ஸ்பரிசம், சுவை ஆகிய ஐம்பொறிகளால் பரிசோதித்து நோயாளியின் வாயால் தேகநிலையைக்கேட்டுத் தெரிந்துகொள்வது ஒரு முறையாகும்.

நோயாளியின் நாடித்துடிப்பை முக்கியமாக ஆராய்ந்து அத்துடன் சிறுநீர், மலம், நாக்கு, சப்தம், சர்மம், கண்கள், பொதுவான தோற்றங்கள் முதலியவற்றைப் பரிசோதிப்பது இன்னொரு பரிசோதனை முறையாகும். இது 'அஷ்டவித பரீட்சை, எனப்படும்.

மேலே முதலாவதாகக் கூறப்பட்ட பரிசோதனைமுறை நவீன கருவிகளைக்கொண்டு செய்யும் தற்கால பரிசோதனையை ஒத்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

**- டாக்டர் வி. ரி. இளங்கோவன் -**

# "போதைவஸ்து மனித சமூகத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்"

(பருத்தித்துறை)

'போதைவஸ்து பாவனை மனித சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஓர் பயங்கர செயலாகும். வடபகுதியிலும் இப்பாவனை பரவிவருவது கவலைக்குரியதாகும். யாழ். குடாநாட்டில் இரத்த நாளங்களுக்குள்ளே ஊசி மூலம் போதைவஸ்துக்களைச் செலுத்தும் மோசமான பழக்கங்களைக் கொண்டவர்கள் இருக்கின்றார்கள் என செய்திகள் வெளிவந்திருப்பதினுல் நாம் மிகக் கவனயாக இருக்கவேண்டியுள்ளது. போதைவஸ்து பாவனையாளர்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொண்டால் அவர்களை மருத்துவத்துறை உளநவத்துறை இணைந்த சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியும்'

இவ்வாறு பருத்தித்துறையில் போறாட் நிறுவனம் நடாத்திய 'ஒளிவிழா'விலே பிரதவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யதார்த்த கலை, இலக்கிய வட்டத்தலைவர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் குறிப்பிட்டார். போதைவஸ்து தடுப்புச் சங்கத் தலைவர் திரு. கே, குகரட்சன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. வைத்திய கலாநிதி முருகானந்தன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'வெளிநாடுகளில் போதைவஸ்துக்களைப் பாவித்து பழகிய பின்னர் எமது பகுதிகளுக்கு திரும்பிய இளைஞர்களும், போதைவஸ்து விற்பனையாளர்களுமே எமது சமூகத்தில் போதை வஸ்துகள் பாவனை அதிகரிப்பிற்கு முக்கிய காரணிகளாக இருக்கின்றனர். இந்நிலையிலே போதைவஸ்துக்கள் பாவனைத் தடுப்பு நடவடிக்கைகளை எமது எதிர்காலச் சந்ததியினர் மத்தியில் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது சமுதாயத்தின் முக்கிய தேவையாகின்றது. முக்கியமாக மாணவர்கள் மத்தியில் போதைவஸ்துகள் [illegible] போதைவஸ்துகள் பாவனையின் விளைவு பற்றிய பூரண அறிவுரைகள் பரப்பப்பட வேண்டும்.

'போதைவஸ்துகள் பாவனையற்ற மனஉறுதி கொண்ட மாணவர்கள்கூட போதைவஸ்துகள் பற்றிய அடிப்படை உண்மைகளை அறிந்திருக்க வேண்டியது முக்கியமாகும், சாகசங்கள் செய்து சாதனைகள் புரியவிரும்பும் மாணவப் பருவத்திலே யாராவது மாணவர்களுக்குப் போதைப் பொருட்களைக் கொடுத்தால் அது எப்படி இருக்குமென்று பரீட்சித்துப் பார்க்க உள்ளம் துடிக்கக்கூடும். பரீட்சித்தால் அதுவே மாணவர்களின் வீழ்ச்சியின் ஆரம்பமாகிவிடும்.

வீடுகளில் கல்லூரிகளில், சமுதாயத்தில் போதைவஸ்துக்கள் பற்றிய உண்மைகளையும் தடுப்பு முறைகளையும் பரப்பி சமுதாயத்தை வழிநடாத்த வேண்டியது மாணவர்களின் தார்மீகக் கடமையாகும். போதைவஸ்து பாவனைத் தடுப்பு நடவடிக்கைகளில் சமூகசேவை நிறுவனங்கள் ஈடுபடவேண்டும் போதைவஸ்து பாவனையாளர்களைச் சமூக சேவைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களை அப்பழக்கத்திலிருந்து விடுபட வழிவகுக்க முடியும்.

போதைவஸ்துப் பாவிப்போருக்கு போலியான பரவச உணர்வுகள் ஏற்படுவதனுல் அவர்கள் மீண்டும் மீண்டும் இதனை நாடுகிறார்கள். தொடர்ந்தும் எவ்வளவு போதைவஸ்தைப் பாவித்தாலும், முன்னைய பரவசம் கிடைக்காது. விரக்தி, வெறுப்புக்களை அடைகின்றனர். அவர்கள் உளரீதியாக மாத்திரமன்றி உடல்ரீதியாகவும் இதற்கு ஆளாகின்றனர். போதைவஸ்துப் பாவனைகளுக்கான பணத்தைச் சேர்ப்பதற்காக சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதற்குக் கூட அவர்கள் தயங்கமாட்டார்கள். போதைவஸ்து அடிமைகள் உடல், உள, பொருளாதார, சமூக பாதிப்புகளுக்குள்ளாகிச் சீரழிந்து இறுதியில் பரிதாபகரமான மரணத்தைத் தழுவி வாழ்வையே முடித்துக்கொள்ளவேண்டிஏற்படுகின்றது. இறப்பில்கூட இவர்கள் மற்றவர்களின் மதிப்பையோ, கவலையையோ, அனுதாபத்தையோ பெறமுடியாத அவலநிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றனர்.

வடமராட்சிப் பகுதியிலிருந்து பல கல்லூரிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும்

(5-ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### பொருளியல் அகராதி

மொழிக்கு மாத்திரம் தான் அகராதி என்று எண்ணிவிடாதீர்கள்! மருத்துவம், பொறியியல் போன்ற பல பாடங்களுக்குக் கையடக்கமான (பொக்கற்சைஸ்) அகராதிகள் வந்துள்ளன. அவ்வப் பாடத்திற்கே உரிய விசேட சொற்றொடர்கள், வரைவிலக்கணங்களை அவற்றிலே காணலாம்.

பொருளியலுக்கு வந்த அகராதியோ வேறு விதம். 4194 பக்கங்கள்—4 பகுதிகள் —அதன் எடையோ 9கிலோ! நாலு வருட முயற்சியில் 1916 விஷயங்களைப் பற்றி 900 எழுத்தாளர்கள் எழுதியுள்ளார்கள்.

யார் இந்த எழுத்தாளர்கள்? பொருளியற் கல்வியிலே புகழ் பூத்த கேம்பிரிட்ஜ், ஹாவார்ட், ஹொக்கின்ஸ்ஆகியமூன்றுபல்கலைக்கழகப் பேராசிரியர்களின் வழிகாட்டலிலே உலகின் பல பகுதிகளையும் சேர்ந்த பொருளியல் அறிஞர்கள் எழுதியுள்ளார்கள்.

நோபல் பரிசு பெற்ற பிறைட்மான், வசிலியன் கீவ், ஹயக் போன்றவர்கள் விசேட கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். 615 பொருளியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் தொகுப்பாசிரியர் யார்தெரியுமா? பிரித்தானியாவின் தொழிற் கட்சித் தலைவர் கினெக் அவர்களின் ஆலோசகர் ஈற்வெல் (Eat well) – பொருளியல் அறிஞருக்கு நல்ல பெயர்ப் பொருத்தம்!

வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "படைகள் முகாம்களுக்குள் முடங்கவேண்டும்"

# ஜனாதிபதி 'பிரேமா'வின் இரண்டாவது கோரிக்கையும் நிராகரிக்கப்படலாம்?

### புதுடில்லி வட்டாரங்கள் தகவல்

[புதுடில்லி]

இந்தியப் படைகளை வாபஸ் பெறுமாறு இலங்கை ஜனாதிபதியின் வேண்டுகோளை இந்தியா நிராகரித்ததுபோல் படைகளை முகாம்களுக்குள் முடக்குமாறு கோரப்பட்டுள்ளதையும் இந்தியா நிராகரிக்கலாமென புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசாவின் இரண்டாவது வேண்டுகோள் தொடர்பாக புதுடில்லி வட்டாரங்கள் கருத்துவெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்:

'ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கடமைகளை இந்திய அமைதிப்படை நிறைவேற்றும் நோக்கில் தொடர்ந்தும் செயற்படும். இலங்கையின் கோரிக்கைகளின் தாக்கம் எதனையும் இந்தியா கவனத்தில் கொள்ளாது போகலாம்.

வடக்குக்கிழக்கில் தற்போது இந்திய அமைதிப்படை நிலை கொண்டுள்ளதால் ஜனாதிபதி பிரேமதாசாவின் எந்தக் கோரிக்கையும் இப்பகுதிகளில் அமுல் நடத்தமுடியாது போகலாம்.

## அதிபரின் புதிய யோசனை

(சுன்னாகம்)

"முன் அறிவிப்புக் கொடுக்காது பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் செய்து பாடசாலைக் கருமங்களை மேற்பார்வை செய்வது நல்ல பலனை அளிக்காது என்ற காரணத்தால் மேலைநாடுகளில் முன் அறிவிப்புக்கொடுத்தே உயர் அதிகாரிகள் பாடசாலைகளைச் சந்திக்கின்றார்கள். அந்தமுறை நல்ல பயனையும் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது. எமது பகுதியிலும் அவ்வாறான முறை ஒன்று அமுலாகவேண்டும் என விரும்புகிறேன்"

இவ்வாறு கொக்குவில் கொத்தணி அதிபரும்கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபருமான திரு. அ. பஞ்சலிங்கம் அண்மையில் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கின்போது வேண்டுகோள் விடுத்தார்.

# குடும்பத் தகராறு தற்கொலையில் முடிந்தது!

(கிளிநொச்சி)

குடும்பத் தகராறு காரணமாக கிளிநொச்சியில் ஒரு குடும்பஸ்தர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

கிளிநொச்சி செல்வா நகரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தியாகராசா (வயது 42) என்பவரே தற்கொலைசெய்து கொண்டவராவார்.

முறிகண்டி இந்து புரத்தைச் சேர்ந்த சந்தணம் செல்வராசா என்ற இளம் குடும்பஸ்தர் ஒருவரும் குடும்பத்தகராறு காரணமாக நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இருமரணங்கள் தொடர்பான விசாரணையையும் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் வைத்து கிளிநொச்சி திடீர்மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே. திருலோகமூர்த்தி மேற்கொண்டு தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

## தாக்குதல் சம்பவம்

(வடமராட்சி)

அல்வாயில் வயலில் வேலை செய்த சிலர் படையினரால் தாக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கள் மாலை அல்வாய் அத்தாய் என்னும் பகுதியில் உள்ள வயல் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த வி. சிவசண்முகம் (வயது 20), எஸ். நாகராசா (வயது 29), எஸ். பரமேஸ்வரன் (வயது 26) ஆகியோரே தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பல்கலைக்கழக மாணவர்:

## தொடர்ந்து பகிஷ்கரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவர் சிலர், முதலாம் வருடத்திலிருந்து இரண்டாம் வருடத்துக்குச் செல்வதற்கான பரீட்சையில் சித்தி பெறத்தவறிவிட்டனர். இவர்களை இரண்டாம்வருட வகுப்பில் கற்பதற்கு அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை முன்வைத்தே விஞ்ஞான பீடத்தின் சகல வருட மாணவர்களும் பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடாத்தி வருகின்றனர்.

## 200 சோடி ஊன்றுகோல்கள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் அன்பளிப்பாகப் பெறப்பட்ட இருநூறு சோடி ஊன்றுகோல்கள் உள்ளன என்றும் ஊன்றுகோல்கள் தேவையானோர் மேற்படி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

### ஜனசக்தி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழைக்குடும்பங்களின் பெயர்களைச் சமர்ப்பிக்கும்படி கிராம சேவகர்களால் கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு உபகுழுக்களும் சமர்ப்பிக்கும் பத்துக்குடும்பங்களில் முதல் மூன்று குடும்பங்க


# ஆண்/பெண் பரிசாரகர்கள் வெற்றிடம்

## யாழ் / கிளிநொச்சி சு. சே. பி. பணிப்பாளர் பெரும்பாகம்

யாழ் / கிளிநொச்சி சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பெரும்பாகத்தில் ஏற்பட்டுள்ள ஆண் / பெண் பரிசாரகர் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பின்வரும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து (ஆண் / பெண்) விண்ணபப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல்வேண்டும்.
2. சம்பள அளவுத் திட்டம்: 16560-23x480-27600/-
3. வயதெல்லை: 18 - 40 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும்.
4. கல்வித் தகைமைகள்:
   (அ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி.
   அல்லது
   (ஆ) கல்விப் பொதுத் தராதர (சா/த)ப் பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/கணிதம் / வர்த்தக கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் இரு அமர்வுகளில் சித்தி.
   (இ) தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளில் கணிதம், முதன் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படும். அப்பயிற்சிக் காலத்தில் நடைபெறும் பரீட்சைகள் யாவற்றிலும், இறுதிப் பரீட்சையிலும் சித்தியடைவோரே பரிசாரகர்களாக நியமிக்கப்படுவர். பயிற்சிக் காலத்தின் போது வேதனம் வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் முழுப் பெயர், விலாசம், தகைமை, தொகுதி என்பவற்றை உள்ளடக்கியதாக முழுத்தாள் அளவிலான கடதாசியில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 04-07-89 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக (நேரிலோ அல்லது தபால்மூலமோ) அனுப்புதல் வேண்டும.

ந. கனகசபை,
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சு. சே. பி, ப. பணிமனை,
யாழ்ப்பாணம்.


# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, மஹியங்கனையில் நடைபெற்ற கம்உதாவ விழாவில் பேசுகையில், ஒருகட்டத்தில்......

"இலங்கையில் குறிப்பாக தென் பகுதியில் இப்பொழுது என்றுமில்லாதவாறு வன்முறைகள் தலைதூக்கியிருக்கின்றன. இலங்கையின் தற்போதைய நிலைக்கு வெளிநாட்டுச்சக்திகள் பின்னணியில் செயல்படுகிறதோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது......"

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, குஜராத்துக்குச் செல்லும் வழியில் ஒரு விமான நிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில்; "இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேறவேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா குரல் எழுப்புவதற்கு வெளிநாட்டுச் சக்திகள் பின்னணியில் இருக்கிறதோ தெரியவில்லை. இதனைக் கண்டுபிடிக்க வேண்டியபொறுப்பு பத்திரிகைகளைச் சார்ந்தது..." என்று கூறினார்.

இந்திய அரசியல் கட்சியான ஜனதாதள் தலைவர் திரு. வி. பி. சிங், புதுடில்லியில் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கை இப்படிக் கூறுகிறது;

"இலங்கைப் பிரச்னை குறித்து அமெரிக்க அரசின் அபிப்பிராயத்துக்கும் இந்தியத் துருப்புக்கள் இலங்கையில் இருப்பது குறித்து அமெரிக்கா காட்டும் அக்கறைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? இலங்கைப் பிரச்னையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு ஏதோ சொல்லியிருக்கிறார். திரு. புஷ் கூறியதை இந்தியப் பிரதமர் வெளியிடுவாரா?"

"ஊடுருவி"

### போதைவஸ்து

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வொளி விழாவிலே பங்குபற்றினர். வடமராட்சிகோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. ஆவ. தங்கராசா, பருத்தித்துறை, புலோலி, கரவெட்டி கொத்தணி அதிபர்களான திரு. பொ.பாலசிங்கம், திரு. சே. ஏகாம்பரநாதன், திரு. ச. சிவபாதசுந்தரம், ஆகியோரும் வட-இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். சுப்பிரமணியமும் இவ்விழாவிலே கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உயர்வகுப்பு மாணவன் செல்வன் மகேஸ்வரன் திவாகரனின் "மாநில மனிதர்களே கேளீர்" கவிதையும் நெல்லியடி ம. மகாவித்தியாலய மாணவர்களின் "குடியும் விடிவும்" நாடகமும், வேலாயுதம் மகாவித்தியாலய மாணவன் செல்வன் எஸ். ரட்ணகுமாரின் "போதைப்பொருள்களின் விளைவுகள் பேச்சும், வட-இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் "மதுக்காரனின் மறக்கோலை" கவிதையும் இடம்பெற்றன. செல்வி கே. வாசுகி நன்றியுரை சொன்னார்.

## திருமலை அரச அதிபர் திடீர் மாற்றம்

(திருகோணமலை)

திருமலை அரசாங்க அதிபர் ஜனப் ஜெயருதீன் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டு, அவரது இடத்திற்கு திரு. எஸ்.ஏ. விஜயகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடகிழக்கு மாகாணசபையின் வேண்டுகோளின் பேரிலேயே முஸ்லிம் ஒருவர் திருமலை அரச அதிபராக முன்னர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## இருவர் நஞ்சுக்குப் பலி!

[சுன்னாகம்]

நச்சுத் திராவகம் அருந்தி மரணமான இருவரின் மரண விசாரணைகள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றன. யாதகலைச் சேர்ந்த கார்த்திகேசு சின்னராசா (வயது 28), அச்சுவேலியைச் சேர்ந்த செல்லப்பா குலேஸ்வரன் (வயது 30) ஆகியோரது மரண விசாரணைகளே நடைபெற்றன.


## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

1. சிரஞ்சீவி — பாணுப்பிரியா
"கோவாவில் C. B. I.
2. S. V. சேகர் ரேகா S. S.
"தங்கமான புருஷன்"
(PYRAMID ORIGINAL)
3. நிழல்கள் ரவி சுலக்ஷனா
"விலங்கு"
(V. G. P. ORIGINAL)
4. ஜெமினி தேவிகா முத்துராமன்
"சுமைதாங்கி"
(ORIGINAL)

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ 315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசி பலன்

**29-06-1989**

ஏகாதசி மாலை 6-24 வரை. பரணி மாலை 7-28 வரை. இராகுகாலம் 1-26 முதல் 3-00 மணி வரை. சித்தயோகம். ஸர்வ ஏகாதசி விரதம். சுப கருமங்களுக்கு ஏற்றதல்ல.

மேடம்: அதிக யோசனை, பண மூலமான பிரச்னை. தொழிற்கேடு, குடும்பப் பிரிவு மனவேதனை தரும் சம்பவங்கள்.

இடபம்: பிரச்னைக்கு தீர்வு. பயணங்களால் காரிய அனுகூலம், குடும்பத்தில் மகிழ்ச்சி, ஆலய தரிசனம்.

மிதுனம்: வீட்டில் சச்சரவு, தாய்வழிப் பகை, அகால போசனம், அதிகாரிகள் வெறுப்பு. அடிமை நிலை.

கடகம்: தொழில் லாபம், சுபகாரியம், பிரச்னைக்கு தீர்வு, அதிகாரிகள் சந்திப்பு, வாகனச் சிறப்பு.

சிங்கம்: புதிய ஸ்தானம், அயலவர் நேசம், பெண்வழி உதவி, குடும்ப குதூகலம், சந்திப்பு.

கன்னி; கண்ணியக் குறைவு அவசர புத்தி. அதிகாரிகள் பகை, கடன் சுமை, பதவி.

துலாம்: இராஜ பயம், தவறான சிந்தனை, பொருள் இழப்பு, மனையாளுக்கு துன்பம்.

விருச்சிகம்: கடித உறவு, பணவரவு, சகோதர உதவி, விருந்துபசாரம், மன மகிழ்ச்சி

தனுசு: நோய் தணியும், காரிய அனுகூலம். விவாக முயற்சி, மகளிர் நேசம், பெரியோர் ஆசி.

மகரம்: தொழில் நஷ்டம், தனித்திருத்தல், வேலைப்பளு, அலைச்சல் எதிரிகள் தொல்லை.

கும்பம்: காரிய தாமதம், சென்ற இடத்தில் தொல்லை, பணக் கஷ்டம், வேண்டாத உறவு, கடன்.

மீனம்; அனுவசிய செலவு, பணப் புழக்கம், தொழில் லாபம், குடும்ப உறவு. மன நிறைவு.

# "நாட்டுக் கூத்துக்குத் தம்மை அர்ப்பணித்த கலைச்சுடர்"

## அண்ணாவியார் நினைவு விழாவில் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''கத்தோலிக்கவழிபாட்டுப் பின்னணியில் சூழலுக்கும் மண்வாசனைக்கும் ஏற்ப கலை இலக்கிய வடிவங்கள் உருவாக்கப்பட்டன. நாட்டுக்கூத்து அவற்றுள் முக்கியமான இடத்தை வகிக்கின்றது.''

கரம்பன் மெலிஞ்சிமுனையில் நடைபெற்ற கலைக்குரிசில் அந்தோனி அண்ணாவியாரின் நினைவு மலர் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய பங்குத் தந்தை அருட்திரு கிருபானந்தன் அடிகள் இவ்வாறு கூறினார்.

பங்குத் தந்தை அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமைநடைபெற்றஇவ்விழாவில் பங்குத்தந்தை கிருபானந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அந்தோனி அண்ணாவியார் நாட்டுக்கூத்தின்மரபின் ஒளிர்வுக்குத் தன்னை அர்ப்பணித்த தனிப்பெரும் கலைச்சுடர். உறுதியான விசுவாசமும் ஆழமான புலமையும் மக்களை நேசிக்கின்ற மனப்பான்மையும் கொண்ட அண்ணாவியாரின் கால் நூற்றாண்டுக்கு மேலான நாட்டுக்கூத்துப் பணியை நாம் மறந்துவிட முடியாது.

உலகக் கலைஞர்கள் பலரை தமது வாரிசுகளாக விட்டுச் சென்ற அண்ணாவியார் மக்களுக்காக வாழ்ந்த மக்கள் கலைஞராவார்.

இந்நினைவு விழாவில் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகக்கலைக்குப் பொறுப்பான கலாநிதி இ. பாலசுந்தரம் தமது உரையில் கூறியதாவது:

நாட்டுக்கூத்து கிராமிய மக்கள் மத்தியில்தான் தோன்றி உயிர்வாழ்கின்றது. இக்கலைக்கு உரமும் வளமும் அளிப்பவர்கள் சாதாரண மக்களே.

அண்ணாவியார் வாழ்ந்து தமது கலைப்பணியைப் புரிந்த மெலிஞ்சிமுனைக்கிராம மக்கள் அனைவருமே கலைப் பிரியர்களாக மட்டுமல்ல, பங்காளிகளாகவும் இருக்கின்றனர், இது பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

எஸ். எட்வேட், பண்டிதர் சோ. தியாகராசா, திரு. ச. மிக்கேல்தாஸ், வி. சின்னத்தம்பி, ச. மகேஷ் ஆகியோரும் உரையாற்றினர்.

அண்ணாவியாரின் 'மந்திரி குமாரன்' நாட்டுக்கூத்தும் இடம்பெற்றது.

## பலாலியில் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

அமைதிப் படையினர் வெளியேறக்கூடாது எனக் கோரி பலாலியில் பிரமாண்டமான ஊர்வலமொன்று நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தில் காணப்பட்டனர்.

சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும், கோஷம் எழுப்பியவாறும் ஊர்வலம் நடைபெற்றது. காங்கேசன்துறை வரை சென்ற இவ்வூர்வலத்தினர், அங்குள்ள இலங்கை வங்கி முகாமையாளரிடம் வங்கியைத் திறந்து, நிவாரணப் பணம் வழங்குமாறு கோரும் மகஜரைக் கையளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி அண்மையில் மன்னார் புனிதசவேரியார் ஆண்கள் கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது.

வங்காலை மத்தியமகாவித்தியாலயமும் (கொத்தணி) மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, பேசாலை மகா வித்தியாலயமும் முறையே 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. இப்போட்டிக்கு பிரதம அதிதியாக மன்னார் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினார்.

## வெற்றிகரமாக

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

த்துவமனை இதயசத்திரசிகிச்சை நிபுணர் ஷோயிம் படாரியா இம்முறையைக் கைக்கொண்டு உலக சாதனை படைத்துள்ளார்.

எய்லினுக்கு இதயத்தில் ஏற்பட்ட ஓட்டையை அடைக்க மெல்லிய 'ஸ்ரீல்' தகடுகளைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சையை டாக்டர்கள் மேற்கொண்டுள்ளனர், தற்போது இவர் பூரண நலத்துடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## உடல் நலம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அஷ்டவித பரீட்சையில் கூறப்பட்ட முக்கிய பரிசோதனையான நாடிப்பரீட்சை சுலபமாகக் கற்றுக்கொள்ளக் கூடியதல்ல. திறமைவாய்ந்த ஆசிரியரின் கீழ் மிகவும் கவனமாகக் கற்றுணரும் அனுபவம் இதற்குத் தேவை.

### ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது மணிக்கட்டில்

நாடித்துடிப்பைத் தொட்டுணர்ந்து கொள்வதற்கு உடலில் பத்து இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன வாயினும் சுலபமாகத் தெரிந்துகொள்வதற்காக மணிக்கட்டிலே நாடிப்பரிசோதனை செய்வது வழக்கம். ஆண்களுக்கு வலது மணிக்கட்டிலும், பெண்களுக்கு இடது மணிக்கட்டிலும் நாடிப்பரிசோதனை செய்யப்படுகிறது.

இந்த நாடிப்பரிசோதனை முறை பண்டைய ஆயுர்வேத முறையில் இல்லாததென்றும் அஷ்டவித பரீட்சையும் நாடிப் பரிசோதனையின் முக்கியத்துவமும் தமிழக மருத்துவ (சித்த மருத்துவ) நூலோரால் கூறப்பட்டவை என்றும் ஆய்வாளர் கூறுகின்றனர்.

நாடித்துடிப்பானது பல்வேறு கால நேரங்களில் வேறுபாடடைந்து காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. வாத, பித்த, கபம் ஆகிய முத்தோஷங்களும் நாடித் துடிப்பில் பிரதிபலிக்குமாதலால் நாடியில் ஏற்படும் மாறுதலைக்கொண்டு நோய் ஏற்படுவதற்கான காரணத்தையும், நோய்த்தன்மையையும் அறிந்துகொள்ளமுடியும்என்று விளக்கப்பட்டுள்ளது.

வாதநாடியானது பாம்பு விரைந்து ஊர்ந்து போவதையொத்திருக்கும் எனவும், பித்த நாடியானது தவளை குதிப்பது போன்றிருக்கும் எனவும், கப நாடியானது யானை அல்லது அன்னத்தின் விதானமான நடையைப்போன்றிருக்கும் எனவும் நாடித்துடிப்பின் மிக நுண்ணிய வேறுபாடுகள் விளக்கப்பட்டுள்ளது.

இந்த வேறுபாடுகளை அனுபவபூர்வமாக பல்லாண்டு பயிற்சியின்மூலமே நன்கு தெரிந்துகொள்ளமுடியும் எனவும், நாடிப் பரிசோதனை மூலமும், ஏனைய அவதானிப்புகள் மூலமும் நோயாளியின் மரண காலத்தைக்கூட (சரியான நேரத்தை) முன் கூட்டியே சொல்ல முடியும் எனவும் பல ஆயுர்வேத டாக்டர்கள் தமது அனுபவத்தின் மூலம் நிருபித்துள்ளனர்.

### மருந்து வகைகள்

சிகிச்சைக்கான மருந்து வகைகளாக குடிநீர் (கஷாயம்), சூதனம், மாத்திரை, இலேகியம், மெழுகு, நெய், தைலம், பதங்கம், செந்தூரம், பற்பம் என பல்வேறு வகைப்பட்ட தயாரிப்புகள் உள்ளன.

இவற்றில் அதிகமாக கையாளப்படும் குடிநீர் எளிதில கிடைக்ககூடிய மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்டுவதாகும். இச்செய்முறை செலவு குறைந்ததும், இலகுவில் செய்யக்கூடியதுமாக விருப்பதால் பொதுமக்களுக்கு மிகவும் பயதுடையதாகும். வைத்தியரின் ஆசோசனைப்படி ஒரு நோயாளி தனக்கு வேண்டிய குடிநீரைத் தானகவே தயாரித்துக் கொள்ள முடிவது இதன் சிறப்பம்சமாகும். இது ஆயுர்வேத முறையில் பிரசித்தி பெற்றதாகுப.

செந்தூரங்கள், பற்பங்கள், மாத்திரைகள் தமிழ் மருத்துவ (சித்த) முறையின் சிறப்பு மருந்துவகைகளாகும்,

கார வகைகளும் (Salts), பாஷாண வகைகளும் (Poionaus Chemicals), உபரசவர்க்கங்களும் (Other Chemicals) மருந்துகளில் இடம் பெறுவது சித்தர்களின் உபகரிப்புகளாகும்.

சித்தமருத்துவம் (தமிழ் மருத்துவம்) என்பது அடிப்படையில் ஆயுர் வேதத்தைத் தழுவியதே என்று ஆய்வாளர் கூறுகின்றனர்.

தமிழக மருத்துவத்துறையில் சித்தர் மருந்துகள் பெற்றுவிட்ட குறிப்பிடத்தக்க செல்வாக்கின் விளைவாகத் தமிழ் மருத்துவர்களுள் ஒரு சாரார் தம்மைச் 'சித்த மருத்துவர்கள்' எனக் கூறிக்கொள்ள விழைந்தனர். சித்தர்கள் எந்தவொரு மருத்துவமுறையினையும் புதிதாகத் தோற்றுவிக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும். தமது ஆராய்ச்சிகளின் மூலமும் பிறநாட்டுத் தொடர்புகள் வாயிலாகவும் தாம் கண்டறிந்த புதிய மருந்துகளை உபகரித்ததன் மூலம் இந்திய மருந்தியலைச் சித்தர்கள் வளம்படுத்தியுள்ளனர் என்றே கருதவேண்டும்.'' என்று கலாநிதி பால சிவ கடாட்சம் தமது ஆய்வுநூலில் குறிப்பிட்டுள்ளமை சிந்தனைக்குரியது.

எப்படியிருப்பினும் எமது பாரம்பரிய மருத்துவ முறையானது நம்மக்களின் நலன் காக்க வல்லது. அது காப்பாற்றப்படவேண்டும், நவீனப் படுத்தப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை இந்த மருத்துவமுறையில் பெரிதும் மருந்துகளின் அடிப்படையாகத் திகழ்வது மூலிகைகளாகும். இவற்றின் பயன்களைத் தெரிந்துகொள்ளவும், அவற்றினை வீட்டுத் தோட்டங்கள் தோறும் பேணிப் பாதுகாத்து வளர்க்கவும், எம் மருத்துவத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவும் வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

கிராமத்து மக்கள் கூட தோட்டத்தில் கிடைக்கும் கீரைகளையும், இலைகறிகளையும், வீட்டுக் கோழி இடும் முட்டைகளையும் சந்தையில் விற்றுவிட்டு உடல் நலத்தைப் பேணிப் பாதுகாப்பது என்ற எண்ணத்தில் 'ரொனிக்' போத்தல்களை வாங்கிச்சுமந்து செல்வதையும்.

வீட்டில் பசு சுரக்கும் பாலை விற்றுவிட்டு 'கொக்கோ கோலாக்கள்' குளிர்பானங்கள் வாங்குவதையும். நெஸ்பிறே, அங்கர், நெஸ்ரோமோல்ட் பெட்டிகளைத் தேடித் திரிவதையும் இன்றைய நவீன பண்பாடு வளர்த்திருக்கிறது.

'எமது உடல் நலமும் எங்கோ அடமானமாகப் போகிறது' என்றே கூற வேண்டி உள்ளது.

இந்த விளைவுகளிலிருந்து நம் மக்களைத் திசை திருப்புவதும், நம்வளங்களைப் பாதுகாப்பதுவும், நம் பாரம்பரிய மருத்துவ முறையினை நவீனப்படுத்தி வளர்த்தெடுப்பதுவும் இந்த மண்ணை நேசிப்பவர்களின் கடப்பாடுகளிலொன்றாகும்.


# கரைச்சிப் பிரதேச சபையின் புனர் நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் 1989

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளரால் 1989ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1989-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விப்பிணை/கேள்விப் பத்திரப் பணம் செலுத்தும்பட்சத்தில் கேள்விப் படிவங்கள் இவ் வலுவலகத்தில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை கரைச்சிப் பிரதேச சபையில் அலுவலக நாளில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

## அட்டவணை

| இல. | வேலை விபரம் | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கணேசபுரம் குமாரசாமி வீதி திருத்தவேலை | 500-00 | 100-00 | 20,0000/- |
| 2. | வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி திருத்தம் | 500-00 | 100-00 | 100,000/- |
| 3. | இராமநாதபுரம் கடிமடுநகர் வீதித் திருத்தம் | 500-00 | 100-00 | 100,000/- |
| 4. | உருத்திரபுரம் ஆயுள்வேத வைத்தியசாலை திருத்தம் | 500-00 | 100-00 | 100,000/- |
| 5. | வட்டக்கச்சி ஆயுள்வேத வைத்தியசாலைத் திருத்தம் | 500-00 | 100-00 | 100,000/- |
| 6. | சிறுவர் பூங்காவுக்கு வேலி அமைத்தல் | 500-00 | 100-00 | 100,000/- |
| 7. | உருத்திரபுரம் ஆஸ்பத்திரி வீதி திருத்தம் | 500-00 | 100-00 | 100,000/- |

சு. வேலுப்பிள்ளை
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி. 1989-06-29.

(எ-314)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உள்ளத்தைத் தூய்மையாக்கி பேரின்பம் அளிப்பது பண்ணிசை"

(அராலி)

''சைவ சமயத்தின் கண்களாக விளங்குபவை திருமுறைப் பண்களாகும். இறைவனை அடைவதற்கு வழியாக அமைந்த திருமுறைகளைப் பண்ணேடு பாடுவதே பொருத்தமானதாகும். உள்ளத்தைத் தூய்மையாக்கி, பேரின்பம் அளிக்க வல்ல சைவத் திருமுறைகளைப் பண்ணேடு பாடுவதனால் இறைவனை இலகுவாக அடையலாம். நம் நாட்டில் திருமுறைகளைப் பண்ணேடு பாடுகின்ற ஆற்றல் வாய்ந்தவர்களுள் திருப்பனந்தாள் ஆதீன தேவார இசைமணி தாவடியூர் இரா. திருஞானசம்பந்தன் குறிப்பிடத்தக்கவர்.''

புளியங்கூடல் சிவநெறித் தொண்டர் கழகத்தின் செயலாளர் திரு. சி. தருமலிங்கம் புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழாவன்று இடம்பெற்ற திருமுறைப்பண்ணிசை அரங்கைத் தொடக்கிவைத்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றும்போது கூறியதாவது:

''எமது கழகம் நடத்திவரும் தேவாரப் பண்ணிசைப் பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. திருஞானசம்பந்தன், ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலும் திருமுறைப் பணி புரிந்து, சைவப்பெரியார் அறிஞர்களது பாராட்டைப் பெற்றவர். இவருக்கு தமிழகத் திருப்பனந்தாள் ஆதீனகர்த்தா கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எசமான் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் 'தேவார இசைமணி' என்ற பட்டத்தையும் திருமுருக கிருபானந்தவாரியார் 'திருமுறை வித்தகர்' என்ற பட்டத்தையும் வழங்கியுள்ளது எமக்குப் பெருமைக்குரியதாகும்'' என்றும் குறிப்பிட்டார்.

## பல்கலைக்கழகத்தில் உளவு பார்த்தார்களாம்
# மரத்தில் கட்டிவைக்கப்பட்ட மூவர் ஆயுதபாணிகளால் கடத்தல்!

[கொழும்பு]

பல்கலைக்கழக மாணவர்களின் நடவடிக்கைகளை உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் தென்பகுதி பல்கலைக்கழகம் ஒன்றில் மரங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்த மூன்று பேரை ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று கடத்திச் சென்றது.

நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம்பற்றி கூறப்படுவதாவது;

பல்கலைக்கழக மாணவர்களின் நடவடிக்கைகளை வேவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், மூன்று பேரைப் பிடித்து மரங்களில் கட்டி வைத்திருந்தனர்.

இந்த மூவரின் நடவடிக்கைகள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளக்குவதற்கான கூட்டம் ஒன்று பல்கலைக்கழகத்துக்குள்ளே நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அப்போது பிஸ்டல்களுடன் நுழைந்த ஒரு கோஷ்டி அங்கு மரங்களில் கட்டிவைத்திருந்த மூவரையும் கடத்திச்சென்றது.

இந்த மூவரும் வாடகைக் கார் ஒன்றில் கடத்திச்செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பிரேத ஊர்வலத்தைக் கலைக்க
# கண்ணீர்ப் புகை; துப்பாக்கிச் சூடு!

[கொழும்பு]

தென்பகுதித் தீவிரவாதத் தலைவர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளக் குழுமியிருந்த சுமார் ஐயாயிரம் பேரைக் கலைப்பதற்கு இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததுடன் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கேகாலைப் பகுதியை அடுத்துள்ள கிராமத்தில் தீவிரவாதத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து, அவரது சடலத்தை கேகாலை மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்ல ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஊர்வலத்தில் சம்பந்தப்பட்ட பகுதியிலிருந்த ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இரண்டு பேர் கலந்து கொள்ளவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.

பிரேத ஊர்வலத்திற்கு லொறிகளையும், ஏனைய வாகனங்களையும் கொடுக்குமாறும் வாகனச் சொந்தக்காரர்களிடம் கேட்கப்பட்டது.

சுமார் ஐயாயிரம் பேர் வரை இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்கு கேகாலை நகரில் திரண்டிருந்தனர். அவர்களைக் கலைப்பதற்காகவே இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைப்பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாகக் கூறப்படுகிறது.

சடலத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்கு அனுமதி கொடுக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதனையடுத்து வெறும் பிரேதப்பெட்டி ஒன்று ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

## "ஐக்கிய நாணய சங்கங்கள்
# மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''ஐக்கிய நாணய சங்கங்கள் சேமிப்பு, கடன் வழங்குதல் போன்ற விடயங்களில் மட்டும் ஈடுபடாது மக்களுக்கு சேவையாற்றுவதிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.''

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் உள்ள ஐக்கிய நாணய சங்கங்கள், சிக்கன கடன் வழங்கும் சங்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சமாஜத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தெல்லிப்பழையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமையக மண்டபத்தில் நடைபெற்ற இச்சமாஜ கூட்டத்தில் வலி. வடக்குப் பிரதேசத்திலுள்ள 29 ஐக்கிய நாணய சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்கள் கலந்து கொண்டனர்.

திரு. பாஸ்கரன் மேலும் பேசுகையில், இந்த சமாஜத்தின் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து உதவிகள் பெற்று கிராமங்களை அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்று தெரிவித்தார்.

பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எ. சின்னத்தம்பி, சங்கங்கள் பதிவு செய்வது பற்றி அறிவுரை வழங்கினர்.

''அந்தியகால சகாய நிதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.'' ''பிரதேச சமாஜத்தின் கடன் எல்லை ஒரு கோடி ரூபாவாக இருக்க வேண்டும்'' என்னும் தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்துறை மாணாக்கைச் சித்திரகூட சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 8ந் திகதி ரதோற்சவமும். 9ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீ ஞான வைரவர் பெருமான் ஆலயத்தின் அலங்கார உற்சவ இறுதிநாள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். அன்று பிற்பகல் சுவாமி வெளிவீதி எழுந்தருளி ஊர்மக்களுக்கு அருள் பாலிப்பார்.

ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் வீதிஉலா விதானையார்வீதி, ஈச்சமோட்டை வீதி, பழையபூங்கா வீதி, கொழும்புத்துறை வீதி, புங்கங்குளம் வீதி, ஈச்சமோட்டை வீதி, விதானையார் வீதி வழியாக மீண்டும் ஆலயத்தைச் சென்றடையும். (வி)

ஃ ஃ ஃ ஃ

யாழ். வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி, ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அடுத்தமாதம் 8-ம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (வி)

ஃ ஃ ஃ ஃ

வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகி அம்பாள் கோவில் ஆனி உத்தர மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது, ஜூலை 8-ம் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (வி)

0 0 0

[இருபாலை]

கோப்பாய் தெற்கு வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 8ந் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் ஆனி உத்தர நடேசர் அபிஷேகமும் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# இலங்கைவங்கி பொன்விழா: நாளை விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் பொன் விழாவையொட்டி நாளை வெள்ளிக்கிழமை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலும், நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தப்படவுள்ளது.

1939ம் ஆண்டு ஆண்டுஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கி இவ்வாண்டு தனது பொன் விழாவைக்கொண்டாடுகிறது.

# ஏழைகளுக்கு அடுத்த வாரம் அலுமினிய பாத்திரங்கள் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் மக்களுக்கும் அடுத்த வாரமளவில் அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

அதேபோல இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிப்படைந்த பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள், கொப்பிகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

அலுமினியப் பாத்திரங்கள் பெறுவதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள பதின்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஆயிரம் பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சீருடைகள் விபரம் வருமாறு:

மாணவருக்கு ஒன்றரை மீற்றர் சாற்சட்டைத் துணியும், ஒன்றரை மீற்றர் சேர்ட் துணியும், மாணவிக்கு இரண்டரை மீற்றர் வெள்ளைத் துணியும் வழங்கப்படும்.

## கோவளம் புதிய மின் மாற்றி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர், கோவளம் கிராம அபிவிருத்திச் சபை புதிய மின் மாற்றி திறப்பு விழா சபைத் தலைவர் திரு. க. தம்பிராசா தலைமையில் இன்று காலை நடைபெறும்.

இந் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஆக்க வேலைப்பகுதி மின் பொறியியலாளர் திரு. என். தனபாலனும், யாழ் மாவட்ட பராமரிப்புப் பகுதி மின் பொறியியலாளர் திரு. எஸ். வல்லிபுரமும் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் உதவி மின் பொறியியலாளர் திரு. கே. நிற்சிங்கம், சுன்னாகம், வட்டுக்கோட்டை மின் அத்தியட்சகர்கள் திரு. வி. மகேந்திரராசா, திரு. ஆர். [illegible] கலந்து கொள்வார்கள்.


ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
4-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்–நதியா நடித்த
சின்னத்தம்பி பெரியதம்பி

நியூசாந்தி யாழ்நகர்
10-30, 2–30 மணிக்கு
விஜயகாந்த் – பூர்ணிமா
சங்கிலிமுருகன்
சட்டம் ஒரு இருட்டறை
(ஈஸ்ட்மன் கலர்)


# உட்கட்டிட அலங்காரம்: கருத்தரங்கில் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

மேலைத்தேய நாடொன்றின் நவீன ஆடம்பர ஹோட்டலின் உள் அலங்கார அமைப்பை அவதானித்த போது, அங்கு சுவர்களில் வர்ணங்களோ, ஓவியங்களோ இல்லை. வெறும் ஓலைப் பாய்கள்தான் தொங்க விடப்பட்டிருந்தன. மின் விளக்குகளுக்கு மேலே பிரம்பினுலான கூடைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. இவை நாம் இலகுவாகவும், மலிவாகவும் எப்படியெல்லாம் உட் கட்டிடங்களை அலங்கரிக்க முடியும் என்பதில் புதிய உத்திகளைக் காண்பிக்சின்றன.

இவ்வாறு 'மகவம்' சந்திப்பு முப்பத்தொன்றின் பொறியியற் பட்டறையில் உட்கட்டிட அலங்காரக் கலை பற்றிய விரிவுரையில் ஒலி, ஒளி அமைப்பு பற்றி விளக்குகையில் பொறியியலாளர் திரு. மதிமகன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

உட்கட்டிட அலங்காரமானது கட்டிட உரிமையாளரினுல் கட்டிடம் கட்டப்படும் முன்னரும், கட்டும் போதும், பின்பும் சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அது போலவே கிடைக்கக் கூடிய எளிமையான கட்டடப் பொருள்களையும், தேவைக்கேற்ற தளபாடங்களையும் தெரிவு செய்வதிலும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்,

பட்டறையில் தலைமையுரை நிகழ்த்திய திரு. வேல். அமுதன், கருத்துக் 'கொடுநர்' 'பெறுநர்' களுக்கிடையேயான சமூக கருத்துப் பரிமாற்ற ஊடகத்தின் ஒரு பரிணும அமைப்பே'பட்டறை' ஆகும் என்ருர்,

'மகவம்' அறிவியல் மின்கலத்திற்கும், சமூக மின் குமிழுக்கும் இடையேயான ஒரு மின்னேட்டத்தொடுப்பாகும். என திரு. ஆனந்தராஜா கூறினுர்.

## பயிற்சி வகுப்பு

(மன்னர்)

பயிர்ச் செய்கை அலுவர்களின் கடமைகள் தொடர்பாகத் தற்பொழுது சேவையிலிருக்கும் கிராம சேவைஅலுவலர்களுக்கும் விவசாயவிரிவாக்கசேவையாளர்களுக்கும் மன்னரில் மூன்றுநாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இப் பயிற்சி வகுப்பை மன்னர் மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஏ.ஸி.செபநாயகம் ஆரம்பித்து வைத்தார்,

இப்பயிற்சியில் பயிர்ச் செய்கை அலுவலர்களின் அதிகாரங்கள், கடமைகள், நீர்ப்பாசனம், ஏக்கர்வரி அறவிடல், விவசாயிகளின் அடையாள அட்டைகள் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இப்பயிற்சியைத் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எம். குரூஸ் நெறிப்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டில் இரவு நேர பஸ் சேவை!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இரவு நேர பஸ்சேவை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இரவு 9-00 மணிவரையாவது இந்த பஸ் சேவை நடத்தப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளைத் தொடர்ந்தே மேற்படி ஆலோசனை இடம் பெறுகிறது.

பஸ் சேவைகள் நடைபெறும் பிரதான வீதிகளிலுள்ள தடைகளையும், மாலை ஆறுமணிக்குப்பின்னர்போக்குவரத்திற்கு தடை செய்யப்படும் வீதிகளின் தடைகளையும் நீக்குவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

மாலை 6-15 மணிவரை மட்டுமே வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் சேவைகளை தற்பொழுது நடத்தி வருதுதெரிந்ததே.

## கிளிநொச்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவே இந்தத் தடை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆனாலும் நேற்றுப் பிற்பகலுக்குப் பின்னர் போக்குவரத்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பியதாகவும், கொழும்பு, வவுனியா போன்ற தூர இடங்களிலிருந்து பல தனியார் இ. போ. ச. பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்ததாகவும் டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன.

## பூம்புகார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதேவேளை நாவற்குழி கரையோரப்பகுதியிலிருந்து நேற்று அதிகாலை தொடக்கம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டவண்ணமிருந்தன.

# பாராளுமன்றை கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை எதிர்வரும் நான்காம் திகதிக்கு முன் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

நாட்டின் தற்போதைய வேலை நிறுத்தம் உட்பட நெருக்கடி நிலையை விவாதிப்பதற்காகவே பாராளுமன்றம் குறிப்பிட்ட தினத்துக்குமுன் கூட்டப்படவேண்டுமென எதிர்க்கட்சிகள் தமது கோரிக்கையில் தெரிவித்திருக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. அமிர்தலிங்கம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. ரிச்சர்ட் பத்திரான, திரு. மைத்திரிபால சேனநாயக்கா, ஐக்கிய தேசிய சோஷலிஸ அணியைச் சேர்ந்த திரு. அத்தாவுட செனவிரத்ன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் ஆகியோர் மேற்படி கோரிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தின் வழமையான கூட்டம் எதிர்வரும் நான்காம் திகதியே நடைபெறுமென்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

# "கால்நடை வளர்ப்போர் கழகம் கூட்டுறவுச் சங்கமாகவேண்டும்"

(மாவிட்டபுரம்)

''கால்நடை வளர்ப்போர் கழகத்தை கூட்டுறவுச்சங்கமாக அமைத்து பதிவுசெய்து கொள்வதால் பல்வேறு பயன்களைப் பெறமுடியும். நிதியுதவிகள் கடன்வசதிகள் வேலைவாய்ப்புகள் போன்று பல்வேறு முயற்சிகளை இச்சங்கம் மூலம் மேற்கொண்டு கால்நடை அபிவிருத்தி இலக்கை அடைய வழி ஏற்படும்.''

இவ்வாறு வலி. வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கஅங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துரையாற்றிய வலி. வடக்கு கால்நடை வைத்திய அதிகாரி திருமதி எஸ். தனபாலசிங்கம் கூறினார்.

தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''இதுவரை காலமும் கால்நடைத்திணைக்களத்தின் கீழ் கால்நடை வளர்ப்போர் கழகங்கள் இயங்கிவந்தன. ஆனால் இக்கழகங்கள் பதிவுசெய்யப்படாமல் ஓரளவு செயல்பட்டு வந்தன.

''இக்கழகத்தை தற்போது கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமாக மாற்றியமைத்து கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவுசெய்து கொள்வதால் பல்வேறு பயன்கள் ஏற்படும். கிராம ரீதியில் கிளைச் சங்கங்களையும் ஸ்தாபித்து கால்நடை அபிவிருத்திக்கு திட்டமிட்டு செயலாற்ற முடியும்.

''1982-ம் ஆண்டு கணக்கு எடுப்பின்படி வலி. வடக்கில் 19 ஆயிரம் மாடுகள் இருந்தன. தற்போது 16 ஆயிரம் மாடுகளாவது இருக்கவேண்டும். ஆனால் 7 ஆயிரம் மாடுகளே இருப்பதாக அறிய முடிகிறது. ஆகவே கிராம ரீதியில் சரியான விபரங்களைத்திரட்டி கால்நடை அபிவிருத்திக்கு வழிவகுக்க வேண்டும் என்றார்.

## சார்க்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டை இலங்கை பகிஷ்கரித்ததைத் தொடர்ந்தே மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாநாடு ஒத்திவைக்கப்படும் என்று நேற்றைய 'ஈழநாடு' செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

## ராஜீவ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தக் கடிதத்தைக் கையளித்தார்.

ஜூலை மாதம் 29-ம் திகதிக்கு முன்னர் இலங்கையிலுள்ள அமைதிப்படையை விலக்கிக்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விடுத்த வேண்டுகோள் தொடர்பான இந்தியப் பிரதமரின் பதில் கடிதமே நேற்றுக் கையளிக்கப்பட்டது.

## மாகாண சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலிநகர் நேற்று வெறிச்சோடிக்காணப்பட்டது. நகரில் பாதுகாப்பு ஒழுங்குகள் பலப்படுத்தப்பட்டன.

## கொக்குவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மும் ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. அச்சமயம் கோவிலுக்குச் சென்ற கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் கந்தையா குலேந்திரா (வயது 49), நந்தாவில் அம்மன்கோவில் பூசகர் தர்மலிங்கசர்மா குகானந்த சர்மா (வயது 19), கோவிலுக்கு வழமையாக பூமாலை கொடுத்துவரும் வீரகத்தி சண்முகம் (62 வயது) ஆகியோர் பலியானவர்களாவர்.

கோவில் பூசகர் அவரது வீட்டுக்கு அண்மையிலும், மற்றிருவரும் கோவிலின் மேற்கு வீதியிலும் இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த செல்லையா இராமசாமி (67 வயது), இரப்பியேல் (62 வயது) ஆகியோர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலியானவர்களின் சடலங்கள் யாழ். அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு, மரணவிசாரணைகள் நடைபெற்ற பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நந்தாவில் அம்மன் கோவில் சுற்றுடலைச்சேர்ந்த பொதுமக்கள் அச்சம் காரணமாக வெளியேறினர். ஆனாலும் நண்பகலுக்குப் பின்னர் [illegible] டம்காணப்பட்டது.

## மிருசுவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் நண்பகலுக்குப் பின்னர் இப்பாதையில் போக்குவரத்துச் சேவைகள் வழமைபோல நடைபெற்றன.

## இராணுவம்

(1ம் பக்கத் தொடச்சி)

நாட்டின் தற்போதைய நெருக்கடிநிலை அமைதிப்படை விவகாரம் குறித்தும் குறித்தும் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

வடக்கு கிழக்கு மக்களின் பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவே அரசு விரும்புவதாகவும், இதனால் இப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்றும் அரசு தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அரசின் முடிவை அமைச்சர் அறிவித்தார்.

## வல்வையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன,

ஆங்காங்கே மதில்சுவரோரங்களில் சுவரொட்டிகள் காணப்பட்டன. வீதிகள் சனநடமாட்டமில்லாது வெறிச்சோடியிருந்தன.

## நெல்லியடியில்

நெல்லியடியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு, ஷெல் பிரயோகங்களினால் கடைகள் வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகின.

நெல்லியடி எரிபொருள் நிலையத்திற்கருகில் 'கிரனேட்' ஒன்று வீசப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து ஷெல் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது. இதனால் நெல்லியடிக்கூடாக நடைபெறும் போக்குவரத்துச் சேவைகள்யாவும் தடைப்பட்டன. சுற்றாடலில் இருந்தவர்கள் பீதிகொண்டு இடம் மாறிச் சென்றனர்.

(கு)

## சடலம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மாதகல் கத்தோலிக்க சேமக்காலைக்குப் பக்கத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்டது.

இளவாலை, முள்ளானை என்ற இடத்தைச் சேர்ந்தவரும், பண்டத்தரிப்பிலுள்ள புடவைக்கடையொன்றில் பணியாற்றியவருமான இளைஞரின் சடலம் அது என்று அடையாளம் காணப்பட்டது.

## ஊரணியில் வரவேற்பு

(மாவிட்டபுரம்)

புதிய குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தை கு. யேசுதாஸ் அன்ரனி பாலா அடிகளாருக்கு அவரது சொந்த ஊரான ஊறணியில் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

ஊறணி புனித அந்தோனியார் தேவாலய வாயிலில் இருந்து ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்ட புதிய குருவானவர் மேற்படி தேவாலயத்தில் முதல் திருப்பலியை நிறைவேற்றி ஆசிர்வாதம் வழங்கினார்.

பெருந்திரளான மக்கள் இவ்வரவேற்பில் கலந்து கொண்டனர்.

## அந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் பரராஜசிங்கத்தின் ஆராய்ச்சிக் காரியாலயத்தில் உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த இந்த மனித எலும்புக்கூடு, குறிப்பிட்ட வைத்தியர் அயல்நாடு சென்றதைத் தொடர்ந்து. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தனியார் 'கராஜ்' ஒன்றில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டு இருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள பரிசோதனைச்சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ள இந்த எலும்புக்கூட்டின் பல இடங்களில் 'கம்பி'கள் கட்டப்பட்டிருப்பதாகவும் இதன் 'மேலதிக மர்மம்' விரைவில் தெரியவருமென்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

# மரண அறிவித்தல்

## திருமதி பாறுவதி வேலுப்பிள்ளை

திருமதி பாறுவதி வேலுப்பிள்ளை காலமானார். இவர்கொழும்பு, 74, செட்டியார் தெரு, விப்ராஜுவலரி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், காரைநகர் சிவன் கோவில் வீதியில் வசிப்பவருமான க. கா. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சரோஜினி தேவி (கனடா), விமலாதேவி (கொழும்பு), செல்வராணி, கமலாம்பிகை (கனடா), தனலட்சுமி (அவுஸ்திரேலியா), இராசேஸ்வரி, தேவராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராசா (கனடா), சண்முகரத்தினம் (ஓமான்), பாலேந்திரா (லண்டன்), கந்தசாமி (அவுஸ்திரேலியா), சிறீ (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சங்கீதா, ரமோனா, நிரஞ்சன், நிசாந்தன், பிரபாகரன், துளசி, ஜனகன், மயூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் (29-6-89 இன்று மாலை 4 மணிக்கு சிவன் கோவில் வீதி, 'செல்வமகால்' இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: க. கா. வேலுப்பிள்ளை.

'செல்வமகால்'
சிவன் கோவில் வீதி,
காரைநகர்.

(சி-2821)

## கந்தையா குலேந்திரா

(உதவி அரசாங்க அதிபர், கோப்பாய்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் கிழக்கு நந்தாவிலை வதிவிடமாகக் கொண்டவரும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபருமாகிய கந்தையா குலேந்திரா அகால மரணமாகிவிட்டார். அன்னார் சிவஈஸ்வரி அம்மாவின் அன்புக்கணவரும், சிவேந்திரனின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சமாதானநீதவான் சின்னையா கந்தையா, வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சிவசம்பு (இளைப்பாறிய புகையிரதப்பகுதிபாதுகாவலர்), சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சத்தியமூர்த்தி (தபாலதிபர், கல்கரேணயா), கமலவேணி, சுந்தரமூர்த்தி (ஆய்வுகூட நுண்ணாய்வாளர், கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை), சத்தியவேணி, ரவீந்திரன் (கிராமசேவை அலுவலர், உடுவில்), விஜயவேணி, அருட்சோதி, கலாவதி, சண்முகேந்திரன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன் (ஆசிரியர், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை), ஆனந்தராசா (ஆசிரியர், இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம்), சிவகுமாரன் (ஆசிரியர், இணுவில் சைவப்பிரகாச வித்தியாலம்), கௌரி, வனஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. சுந்தரமூர்த்தி

(சி-2822)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81.
Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu.
Telephone: 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org